1980 ஜூலை 21]

பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதமும் ஏற்கெனவே இருந்த 31 சதவீதத்திற்குப் பதிலாக பிற்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீதமும் கொடுக்கப்படவேண்டுமென்பது விதி. அது கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

பெற்றோர்—ஆசிரியர் சங்கம்

*வினா எண். 27— திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர் யார் யார் ?

(ஆ) இச்சங்கத்தின் 1977–78 ஆண்டின் இருப்புத்தொகை எவ்வளவு ?

(இ) இத்தொகை எவ்வகையில் செலவு செய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இக்கழகத்தின் தற்போதைய பொதுக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு :—

தலைவர் :

கல்வி அமைச்சர்.

துணைத் தலைவர்கள் :

1. அரசு கல்வித்துறை ஆணையர்—செயலர்.
2. பள்ளிக் கல்வி இயக்குநர்.
3. மாநில பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து தேர்வு செய்யும் ஒரு பெற்றோர் பிரதிநிதி.
4. மாநில பொதுக்குழு உறுப்பினர்களிலிருந்து பொதுக் குழுவால் நியமனம் செய்யப்படும் ஒரு ஆசிரியர் பிரதிநிதி.

பொருளாளர் :

பள்ளிக் கல்வி இயக்குநரகத்தின் நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர்.

செயலர் :

அரசால் நியமிக்கப்படும் மாவட்டக் கல்வி அதிகாரி தகுதியில் உள்ள அரசு அலுவலர்.

இணைச்செயலர் :

சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உறுப்பினர்கள் :

1. கல்வித்துறை துணைச் செயலர்.
2. ஊரகவளர்ச்சித் துறை இயக்குநர்.
3. சமூகநலத்துறை இயக்குநர்.
4. சென்னை மாநகராட்சி ஆணையர்.
5. மதுரை மாநகராட்சி ஆணையர்.
6. நகரவை ஆய்வாளர், சென்னை.
7. அரிசன நல இயக்குநர்.
8. வருவாய் மாவட்ட உறுப்பினர்கள் 32 பேர்கள்.
9. அரசு நியமனம் —5 பேர்கள்.

(ஆ) 31—3—1978 அன்று இருப்பு நிலை சேமிப்பு கணக்கில் ரூ. 56,467·69
வைப்பீடாக (Fixed Deposit) ரூ. 9,11,702·00

(இ) 1977–78-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது.

1. மாணவ மாணவிகளுக்கு காந்தியடிகள் பிறந்த தின விழா, குழந்தைகள் தின விழா போன்ற நாட்களில் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

2. பள்ளியிறுதித் தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி காட்டிய பள்ளிகளுக்கு பரிசுப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. செய்தி என்ற காலாண்டு இதழ் 12,000 படிகள் அச்சிட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தோடு இணைப்புச் செய்த பள்ளிகளுக்கு இலவசமாக அனுப்பப்பட்டுள்ளது.

4. இது தவிர மாவட்டக்கிளை நிர்வாகத்திற்கும் மாநிலக் கழக நிர்வாகத்திற்கும் செலவுகள் செய்யப்பட்டுள்ளன.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண் 28— திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தற்போது உள்நோயாளிகளுக்கான கட்டிலுடன் கூடிய படுக்கைகள் எவ்வளவு உள்ளன ?